கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக

எடப்பாடி கே. பழனிசாமி

மதுரை, மார்ச் 29: கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் தமிழகத்தில் ஒரே அலைதான் வீசுகிறது. அது, அதிமுக கூட்டணிக்கான ஆதரவு அலை. முந்தைய அதிமுக அரசின் சாதனைகளை விளக்கிக் கூறி, அடுத்து நிறைவேற்றவுள்ள பணிகளுக்கு வாக்குறுதி அளித்து மக்களிடம் வாக்குகள் கோருகிறோம். அதிமுக கூட்டணிக்கு தமிழக மக்களிடம் அமோக வரவேற்பு உள்ளது.

இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகள், தேர்தல் கால சூழலுக்கேற்ப கூட்டணி அமைத்துக் கொள்வது வழக்கம். அந்த வகையில்தான், முன்பு அதிமுக, பாஜக கூட்டணி அமைந்தது. கூட்டணியில் உள்ள கட்சியையே விமர்சிக்கும் வழக்கம் திமுகவுக்கு உண்டு. ஆனால், அதிமுகவுக்கு அந்த வழக்கம் கிடையாது.

அதிமுகவை நம்பி வந்து கூட்டணி அமைத்தவர்களுக்கு இறுதிவரை விசுவாசமாக இருப்போம். கூட்டணி தர்மத்தை மீறாத கட்சி அதிமுக. அதனால்தான், கூட்டணியில் இருக்கும் வரை பாஜகவை விமர்சிக்கவில்லை. தற்போது, அந்தக் கூட்டணியிலிருந்து விலகிவிட்டோம், விமர்சிக்கிறோம். தமிழக நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிப்பதுடன், முறியடிக்கவும் செய்வோம். கருத்துக் கணிப்பு என்ற பெயரால் அதிமுவுக்கு எதிரான பிரசாரத்தை சிலர் திட்டமிட்டு பரப்புகின்றனர். தமிழகத்தில் அதிமுகவுக்கான மக்கள் செல்வாக்கு உயர்ந்துள்ளது என்பதே உண்மையான கள நிலவரம் என்றார்.

முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே. ராஜூ, ஆர்.பி. உதயகுமார், அதிமுக வேட்பாளர் மருத்துவர் பா. சரவணன், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மதுரை கே.கே. நகர் சுந்தரம் பூங்கா அருகே வெள்ளிக்கிழமை மதுரை மக்களவை தொகுதி அதிமுக தேர்தல் அலுவலகத்தைக் குத்துவிளக்கேற்றி திறந்துவைக்கிறார் அதிமுக பொதுச் செயலரும் முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே. பழனிசாமி. உடன் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே. ராஜூ, ஆர்.வி. உதயக்குமார், மதுரை மக்களவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் சரவணன் உள்ளிட்டோர்.

திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் பயனில்லை

சென்னை, மார்ச் 29: மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்காது என்று தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை கூறினார்.

வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை பகுதிகளில் பாஜக வேட்பாளர்கள் பால் கனகராஜ், வினோஜ் பி செல்வம், தமிழிசை சௌந்தரராஜன் ஆகியோருக்கு ஆதரவாக பல்வேறு இடங்களில் அவர் பிரசாரத்தின்போது பேசியதாவது:

பாஜக ஆட்சிக்கு வந்தபோது பொருளாதாரத்தில் 11-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, இப்போது 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆனால், திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழக அரசின் கடன் ரூ.8.53 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

கோவையில் திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி பேசும்போது, அண்ணாமலை, இடஒதுக்கீடுக்கு எதிரானவர் என குற்றஞ்சாட்டியுள்ளார். குடும்ப இடஒதுக்கீடு முறைக்குதான் நான் எதிரானவன். வடசென்னையில் கூட திமுக முன்னணி நிர்வாகி ஆற்காடு வீராசாமியின் மகன் கலாநிதி வீராசாமி ஏற்கெனவே வெற்றி பெற்றார். இப்போதும் அவரே போட்டியிடுகிறார். இதுபோன்ற குடும்ப இடஒதுக்கீடு முறையை எதிர்க்கிறேன்.

பிரதமர் மோடியின் அமைச்சரவையில் 76 பேரில் 11 பேர் பெண்கள், 12 பேர் பட்டியல் இனத்தவர், 27 பேர் பிற்படுத்தப்பட்டோர் இடம்பெற்றுள்ளனர். இந்திய அரசியலில் இதுபோல இதுவரை இருந்தது இல்லை.

திமுக அமைச்சரவையில் 35 பேரில் 2 பேர் மட்டுமே பெண்கள். அதிலும் ஒருவர் குடும்ப இடஒதுக்கீடு முறையில் வந்தவர். பட்டியல் சமூகத்தினர் 3 பேர் மட்டுமே உள்ளனர். எனவே, சமூகநீதி பற்றி பேச திமுகவுக்கு அருகதை இல்லை. மீண்டும் மோடி ஆட்சி அமைவதால் பாஜக எம்பிக்கள் வெற்றி பெற்றால் தான் தமிழக மக்களுக்கு பயன் கிடைக்கும். மக்களவைத் தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு வாக்களிப்பதால் பயனில்லை என்றார் அவர்.

கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக

நெய்வேலி, மார்ச் 29: கொள்கைக்காக பாடுபடும் கட்சி பாமக என்று அந்தக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ் கூறினார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெள்ளிக்கிழமை இரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், பங்கேற்ற ராமதாஸ், கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளர் தங்கர் பச்சானை ஆதரித்து வாக்கு சேகரித்து பேசியதாவது:

உலகமே வியந்து பார்த்து அதிசயிக்கும் மனிதர் பிரதமர் மோடி. நேரு குடும்பத்தில் ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோர் 3 முறை பிரதமர்களாக இருந்தனர். தற்போதைய மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று, பிரதமர் மோடி 3-ஆவது முறையாக மீண்டும் பிரதமராக பதவியேற்பார்.

காங்கிரஸ் கொள்கைகள் நாட்டு மக்களுக்கு தேவையில்லாதது எனக் கூறி, அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான் திமுகவை அண்ணா தொடங்கினார். இப்போதெல்லாம் யார் யாரோ கட்சி தொடங்குகின்றனர். கொள்கை தெரியாமல் பல்வேறு கட்சிகள் உள்ளன.

பாமக அன்று முதல் இன்று வரை கொள்கைகளுக்காகவும், அவற்றை நிறைவேற்றவும் தொடர்ந்து பாடுபட்டு வரும் கட்சி. பிரதமர் மோடியை எனக்குப் பிடிக்கும். என்னை அவருக்கு ரொம்பப் பிடிக்கும். தமிழகத்தின் மூத்த தலைவர் எனக்கூறி, என்னை கட்டித் தழுவினார். எந்தப் பதவிக்கும் போவதில்லை என்று சத்தியம் செய்து 85 வயது வரை அதைக் காப்பாற்றி வருகிறேன்.

கடலூர் மக்களவைத் தொகுதி பாமக வேட்பாளராக தங்கர் பச்சானை தேசிய ஜனநாயகக் கூட்டணி களமிறக்கியுள்ளது. இவர் வெற்றிபெற்றால், மாவட்ட வளர்ச்சிக்கு என்ன தேவை என்பதை துல்லியமாக திட்டமிட்டு நிறைவேற்றுவார். தங்கர் பச்சானின் செயல்பாடு மக்கள் சார்ந்து அற்புதமாக இருக்கும் என்றார் ச.ராமதாஸ்.

பாஜகவும், காங்கிரஸும் ஒரே நிலைப்பாடு உடைய கட்சிகள்தான்

கடையநல்லூர், மார்ச் 29: பாஜகவும், காங்கிரஸும் ஒரே நிலைப்பாடு உடைய கட்சிகள் தான் என விமர்சித்தார் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்.

தென்காசி மக்களவைத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மதிவாணனை ஆதரித்து கடையநல்லூர் மணிக்கூண்டு அருகே வெள்ளிக்கிழமை பிரசாரம் மேற்கொண்ட அவர் பேசியதாவது:

பண பலம், சமூகத்தில் செல்வாக்கு இருந்தால் மட்டுமே அரசியலுக்கும், அதிகாரத்துக்கும் வரமுடியும் என்ற நிலை உள்ளவரை அடித்தட்டு மக்களுக்கான சேவை என்பது கனவாகவே இருக்கும். அந்த நிலையை மாற்றுவதற்காக நாம் தமிழர் கட்சி தேர்தலில் போட்டியிடுகிறது. தூய அரசியல் மூலமாக நல்லாட்சியை மலரச் செய்ய வேண்டும் என்ற கனவுடன் களம் காண்கின்றோம்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று பாஜக முழங்குகிறது. ஆனால், பிகார், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு பல கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், தமிழகத்தில் ஒரே கட்டமாக தேர்தலை நடத்தப்படுகிறது. இதுவரை மத்தியில் ஆட்சியில் இருந்தபோது எதையும் செய்யாதவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்த என்ன செய்யப் போகிறார்கள் என்பதை தமிழக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இடஒதுக்கீடு என்பது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல. ஆனால், அத்தகைய நடைமுறையைக் கொண்டு வந்துள்ள பாஜகவுடன் பல கட்சிகள் கூட்டணி வைத்துள்ளன. இடஒதுக்கீடு விஷயத்தில் பாஜகவின் நிலைப்பாட்டை காங்கிரஸும் எதிர்க்கவில்லை.

ஆகவே, கொள்கைகளுக்காக தேர்தல் களம் காண்பது நாம் தமிழர் கட்சி மட்டுமே. பாஜக தீவிரமான இந்துத்துவா என்றால், காங்கிரஸ் மிதமான இந்துத்துவா. இரண்டு கட்சிகளுக்கும் அவ்வளவுதான் வித்தியாசம்.

தமிழகத்தில் திராவிட கட்சிகளால் அனைத்து உரிமைகளும் பறிபோய்விட்டன. மத்திய அரசின் 100 நாள் வேலை திட்டத்தால் உழைப்பு குறைந்துவிட்டது. வேளாண்மை உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு ஆள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. இதனால் வேளாண்மையை விட்டு வெளியேறும் அவலம் நடந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். மக்கள் பணத்துக்காக வாக்களிக்க கூடாது; கொள்கைகளுக்காக எங்களுக்கு வாக்களியுங்கள் என்றார்.

தமிழகத்தில் அடுத்த கால் நூற்றாண்டுக்கு திமுக ஆட்சி தொடரும்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு

சென்னை, மார்ச் 29: தமிழகத்தில் அடுத்துவரும் கால் நூற்றாண்டு காலத்துக்கு திமுக ஆட்சியே தொடரும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் திமுக சார்பில் சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணி அலுவலகத்தை அமைச்சர் சேகர்பாபு வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசியது:

தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் வடசென்னை மக்களவைத் தொகுதியில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம், கணேசபுரம் மேம்பாலம், ஆர்.கே. நகர் மேம்பாலம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வடசென்னையின் வளர்ச்சிக்கு தனிக்கவனம் செலுத்தி ரூ.2,000 கோடி அளவுக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்தில் சென்னை தங்க சாலை மணி கூண்டு அருகே ரூ.4,414 கோடி அளவுக்கு வளர்ச்சி திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. வடசென்னையை, தென் சென்னைக்கு நிகராக அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படுத்துவோம். தமிழகத்தின் இனி கால் நூற்றாண்டுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி தொடரும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, மக்களவை உறுப்பினர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமாகா தேர்தல் அறிக்கை நாளை வெளியீடு

சென்னை, மார்ச் 29: தமாகா தேர்தல் அறிக்கையை அந்தக் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 31) வெளியிடவுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் கூட்டணி அமைத்து, தமாகா 3 தொகுதிகளில் போட்டியிடுகிறது. பாஜக, தமாகா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஜி.கே.வாசன் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

சென்னைக்கு உள்பட்ட தொகுதிகளில் சனிக்கிழமை பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார். இந்த நிலையில், தமாகாவின் தேர்தல் அறிக்கையை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் ஜி.கே.வாசன் ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளார்.

மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறப்பு: கேளிக்கை விடுதியின் மேலாளர் கைது

சென்னை, மார்ச் 29: சென்னை ஆழ்வார்பேட்டையில் கேளிக்கை விடுதி மதுபானக் கூடம் இடிந்து 3 பேர் இறந்த விபத்து தொடர்பாக அந்த விடுதியின் மேலாளரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ஆழ்வார்பேட்டை சேமியர்ஸ் சாலையில் செயல்படும் ஒரு தனியார் கேளிகை விடுதியில் மதுபானக் கூடத்தின் முதல் தளத்தின் மேற்கூரை வியாழக்கிழமை மாலை திடீரென இடிந்தது. முதல் தளம் இடிந்து விழுந்ததால், தரைத்தளத்தின் மேற்கூரையும் இடிந்து விழுந்தது.

மதுபானக் கூடத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்கள் திண்டுக்கல் சைக்ளோன் ராஜ், மணிப்பூர் திருநங்கை லல்லி, மேக்ஸ் ஆகிய 3 பேர் உயிரிழந்தனர்.

மரணத்தை விளைவிக்கும் வகையில் செயல்பட்டதாக அபிராமபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து, கேளிக்கை விடுதியின் மேலாளர் கோட்டூர்புரத்தைச் சேர்ந்த சதீஷை (35) வெள்ளிக்கிழமை கைது செய்தனர். விடுதி உரிமையாளர் அசோக்குமாரை போலீஸார் தேடுகின்றனர்.

வல்லுநர் குழு ஆய்வு: இந்த சம்பவத்தில் மதுபானக் கூடம் பலவீனமான கட்டட அமைப்புகளுடன் இருந்ததால் விபத்து ஏற்பட்டதாகவும், மெட்ரோ ரயில் திட்டத்துக்காக அந்த கேளிக்கை விடுதியின் அருகே சுரங்கப்பாதை அமைக்கப்படுவதால் விபத்து ஏற்பட்டதாகவும் இரு வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

விபத்துக்கான காரணத்தை துல்லியமாக கண்டறிய கோட்டூர்புரம் உதவி ஆணையர் பாரதிராஜன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் பொதுப் பணித் துறை பொறியாளர், மாநகராட்சி அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை ஆய்வைத் தொடங்கிய இக்குழுவினர், ஓரிரு நாள்களில் ஆய்வை முடித்து, அறிக்கையை காவல் துறைக்கு அளிக்கும் எனக் கூறப்படுகிறது.

கடன் தொல்லை: ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் தற்கொலை

உத்தமபாளையம், மார்ச் 29: சின்னமனூரில் கடன் தொல்லையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தற்கொலை செய்து கொண்டனர்.

தேனி மாவட்டம், சின்னமனூர் சொக்கநாதபுரம் தண்ணீர் தொட்டித் தெருவைச் சேர்ந்த அமமுக கட்சி பிரமுகர் செவத்தி வீரன் (60). இவர் ஆனைமலையன்பட்டியிலுள்ள தனியார் மதுக் கூடத்தில் வேலை செய்து வந்தார். இவரது மனைவி ஒச்சம்மாள் (51), சின்னமனூர் நகராட்சியில் வீடுகளுக்குச் சென்று மருந்து தெளிக்கும் பணி செய்து வந்தார். இவர்களது மகன் ராஜேஷ் (31), தனியார் நிதி நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை இவர்களது வீடு நீண்ட நேரம் திறக்காததால், சந்தேகமடைந்த உறவினர் சுந்தரவள்ளி ஜன்னல் வழியாக பார்த்தபோது, வீட்டினுள் மூவரும் வாயில் நுரை தள்ளியபடி கிடந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த சின்னமனூர் காவல் உதவி ஆய்வாளர் சுல்தான் பாட்ஷா, போலீஸார் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று மூவரையும் மீட்டு, சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவர்களை பரிசோதனை செய்த மருத்துவர்கள், மூவரும் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில், செவத்திவீரன் வீடு கட்டுவதற்காக பலரிடம் கடன் வாங்கியிருந்தாராம். அந்தக் கடனை அடைப்பதற்காக வீட்டில் விசேஷம் வைத்து, அதில் வந்த செய்முறைப் பணத்தில் ஒரு சிலரின் கடனை அடைத்தாராம்.

இதனிடையே, தனியார் நிறுவனத்திடம் பெற்ற வீட்டுக் கடனை செலுத்த முடியாததால், கட்டிய புதிய வீட்டை விற்றுவிட்டாராம். ஆனாலும், கடன் தொல்லை குறையவில்லை. இந்த நிலையில், வாடகை வீட்டில் வசித்து வந்த செவத்திவீரன் தனது மனைவி, மகனுடன் பாலில் விஷம் கலந்து குடித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. தற்கொலை செய்து கொண்ட மூவரின் உடல்களும் கூறாய்வுக்காக சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப்பட்டன. இதையறிந்த உறவினர்கள் மருத்துவமனை பகுதியில் அதிக அளவில் குவிந்தனர்.

இதையடுத்து, தேனி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் மேற்பார்வையில், போடி காவல் துணைக் கண்காணிப்பாளர் பெரியசாமி தலைமையிலான போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். இதுகுறித்து சின்னமனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

NAME CHANGE

I, **MAHENDAR KUMAR MADANCHAND** son of Madanchand, Born on 25.01.1967(Native District Erode) residing at Door No. 36, Kottair Street, Karungalpalayam, Erode - 638 003. Hence forth be known as **"MAHENDRA KUMAR MADANCHAND"**

NAME CHANGE

I state that my daughter's previous name is **KUMARI PIRIYA** as per Army Service Records now I hereby declare that my daughter's correct name is **PRIYA BHARTI RAJPUT** and this is here true and actual name which is recorded in her Aadhaar Card No. 3447 9443 6701 and other record. Service No. **6488714 M** Rank **SEP** Name **NARAYAN SINGH RAJPUT Unit: 284 DSC PLATOON**, Cordite Factory, Aruvankadu, The Nilgiris, Tamil Nadu - 643202.

(PRIYA BHARTI RAJPUT)

Piramal Capital & Housing Finance

பிரமல் கேப்பிட்டல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்

பெருநிறுவன அடையாள எண் (CIN): L65910MH1984PLC032639

பதிவு அலுவலகம்: அலகு எண் 601, 6ஆவது தளம், பிரமல் அமிட்டி கட்டடம், பிரமல் அகஸ்டியா மாநகராட்சி பூங்கா, கமானி சந்திப்பு, தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை - 400070.

கிளை முகவரி: திராஜ் பாக், கட்டடம் "A" தரைத்தளம் & 1ஆவது தளம், ஆக்சிஸ் வங்கி அருகில், மோனலிசா கட்டடம் எதிரில், ஆக்ரா சாலை, அரிஹாவாஸ் வட்டாரம், நவ்பாடா, தானே (மேற்கு) - 400 602.

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3(1)-இன் கீழ், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்கூறிய சட்டம்)-இன்படி கீழே பிரமல் கேப்பிட்டல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெடின் (PCHFL) அதிகாரப்பூர்வ அலுவலர் ஆவார். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி அதிகாரப்பூர்வ அலுவலரானவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன்படியான கோரிக்கை அறிவிப்பினைப் பின்வரும் கடன்தாரர்(கள்) ('குறிப்பிட்ட கடன்தாரர்(கள்)')-க்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். அந்த விவரங்கள் கீழேயும் கொடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இங்கு மீண்டும் வெளியிடப்படும் இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தத் தொகையைக் கீழே குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து தொகை செலுத்தப்படும் மற்றும்/அல்லது பெறப்படும் நாள் வரையான மேற்சொன்ன கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட வட்டியுடன், கடன் ஒப்பந்தப்படியும் குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) தாக்கல் செய்த ஆவணங்கள் / எழுத்து மூலங்கள் ஏதும் இருப்பின் அவற்றின்படியும் PCHFL-க்குச் செலுத்தி விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஈட்டுறுதியாகக் கீழ்க்காணும் சொத்துக்கள் PCHFL-இடம் குறிப்பிட்ட கடன்தாரர்களால் முறைப்படி அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை - செயல்படாச் சொத்தாக வகைப்படுத்தப்பட்ட (NPA) நாளுடன்	கடனீட்டுச் சொத்து விவரம் (அசையாச் சொத்து)
(LC எண்: M0116965 - கண்ணூர் கிளை) **அமந்த் S குமார்** (கடன்தாரர்) **மினி கவிதா குமார்** (கூட்டுக் கடன்தாரர் 1)	01.03.2024 / ரூ.3304390/- (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) செயல்படாச் சொத்தாக வகைப்படுத்தப்பட்ட (NPA) நாள்: (04.02.2024)	பழைய சர்வே எண் 72/4, மறுசர்வே எண் 144/1, ரெயின்போ ரியல்டர்ஸ் அபார்ட்மெண்ட், கண்ணூர் 2 கிராமம், கண்ணூர் வட்டம், கண்ணூர் மாவட்டம் கேரளா - 670602.

குறிப்பிட்ட கடன்தாரர்கள் மேற்சொன்னபடி தொகையை PCHFL-க்குச் செலுத்தத் தவறினால், மேலே உள்ள கடனீட்டுச் சொத்துக்கள் மீது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் உரிய விதிகளின்படி PCHFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதன் பொறுப்பு, செலவினங்கள், விளைவுகள் அனைத்தையும் முழுக்க முழுக்கக் குறிப்பிட்ட கடன்தாரர்களே எதிர்கொள்ள வேண்டியிருக்கும். மேற்கூறிய சட்டத்தின்படி PCHFL-இன் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி இல்லாமல் மேற்கண்ட சொத்துக்களைக் குறிப்பிட்ட கடன்தாரர்கள் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு வகையிலோ கைமாற்றம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தை அல்லது விதிகளை மீறுவோர் அல்லது மீறத் துணை புரிவோர் அந்தச் சட்டத்தின்படி சிறைத்தண்டனை பெற மற்றும் / அல்லது அபராதம் செலுத்த நேரிடும்.

நாள் : 30.03.2024
இடம்: தமிழ்நாடு

ஒம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
பிரமல் கேப்பிட்டல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

பெருநிறுவன அலுவலகம் : சோழா க்ரஸ்ட், சூப்பர் B, C54 & C55, 4, திரு வி க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032.

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (விற்பனை - மின்னணு விலைகோரல் மூலம் மட்டும்)

பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(6) மற்றும் 9(1) ன் கீழ் அசையா சொத்துக்கான விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக களம் (A) ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த **சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்** - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் களம் (D) ல் விவரிக்கப்பட்டவாறு ஆக்கபூர்வ / இயற்கவாதீனம் எடுக்கப்பட்டுள்ள களம் (C) ல் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் இதன் கிழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை செய்யப்படும்.

இதன் மூலம் கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சட்டபூர்வ வாரிசுகள், சட்டபூர்வ பிரதிநிதிகள் (தெரிந்தோ தெரியாமலோ) செயலுறுத்துபவர்(கள்), நிர்வாகி(கள்), பின் தொடர்ச்சியாளர்(கள்) மற்றும் பணியமர்த்தப்பட்டவர்(கள்), ஆகியோரில் களம் (A) ல் குறிப்பிட்டவாறு எது பொருந்துமோ அது., அந்த நபருக்கு பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு கூர்ந்து, ஜாமீன் பெற்று கடனளித்த சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - ன் வலைதளம் https://www.cholamandalam.com மற்றும் https://bankauctions.in ல் உள்ள தொடர்பை பார்வையிடவும்.

வ எண்	[A] கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	[B] வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை (ஜாமீனளித்து பெற்ற கடன்)	[C] அசையா சொத்து / ஜாமீன் சொத்து விபரம்	[D] சுவாதீன வகை	[E & F] அடிப்படை விலை (ரூ.) / டேவணித் தொகை (ரூ.)	[G] ஏல தேதி & நேரம்
1	கடன் கணக்கு எண் : HL05MTP000008088 1) செல்வராஜ் M. 2) சாந்தி S. இருவரின் முகவரி : எண் 78, பாலாஜி நகர் ஃபேஸ் II, பேருந்து நிறுத்தம் அருகில், கோயமுத்தூர் வடக்கு, தமிழ்நாடு - 641 048 மேலும், சர்வே எண். 296/2B, சைட் எண். 25, மேற்கு பகுதி ஸ்ரீ பாலாஜி நகர், காளப்பட்டி, பேருந்து நிறுத்தம் அருகில், கோயமுத்தூர் வடக்கு - 641035.	28.03.2024ம் தேதியின் படி, ரூ. 24,10,481/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து பத்தாயிரத்து நானூற்று எண்பத்து ஒன்று மட்டும்)	கோயமுத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் சார்பதிவகம், காளப்பட்டி கிராமம், சர்வே எண். 296/2B ல் உள்ள 2.14 ஏக்கர்., லே அவுட்டாக உருவாக்கப்பட்டு அங்கீகார எண். 821/1993 ன் படி அங்கீகரிக்கப்பட்ட மேற்படி இடத்தில் உள்ள சைட் எண். 25 ன் மேற்கு புறம்., இதன் எல்லைகளாவன பின்வருமாறு : தெற்கு - 40 அடி கிழமேல் லே அவுட் சாலை, கிழக்கு - சர்வே எண். 315, மேற்கு - சைட் எண். 25 ன் கிழக்கு பாகம், வடக்கு - சர்வே எண். 296/2B, அளவீடுகளாவன : கிழமேல் வடக்கு - 20 அடி., கிழமேல் தெற்கு - 31 அடி., தென்வடல் கிழக்கு - 83 அடி, தென்வடல் மேற்கு - 88 அடி., என மொத்தம் 2180 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி இடம் மற்றும் அதனுடன் கூடிய இதர வசதிகள் மற்றும் வழி வசதி உரிமைகள் ஆகியன.	(சுவாதீனம்)	ரூ.58,82,500/- (ரூபாய் ஐம்பத்து எட்டு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து ஐனூறு மட்டும்) / ரூ.5,88,250/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்து எட்டாயிரத்து இருனூற்று ஐம்பது மட்டும்)	03.05.2024 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (விலைப்புள்ளி ஆவணத்தின் படி, ஒவ்வொரு முறையும் 5 நிமிடம் என எண்ணிலடங்கா முறை தன்னியல்பான 5 நிமிட நேர நீட்டிப்புடன்)

1. ஆய்வு தேதி : 01.05.2024 / 2. குறைந்தபட்ச விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை : ரூ.10,000/-
3. விலைப்புள்ளி / டேவணித்தொகை / பங்கேற்பதற்கான வேண்டுதல் கடிதம் சமர்ப்பித்தல் : 02.05.2024 மாலை 05.00 மணி வரை.

* மற்றும் பணம் செலுத்தப்படும் வரை மற்றும் / அல்லது பணமாக்கப்படும் வரை, கடன் ஒப்பந்த நியந்தனைகளின் படி மேற்கொண்டு வரும் பொருந்தத்தக்க வட்டி, நிகழ் செலவுகள், செலவுகள், கட்டணங்கள் ஆகியன.

சொத்து ஆய்வு தொடர்பான உதவி அல்லது விலைப்புள்ளி ஆவணம் பெற மற்றும் இதர விசாரணைகளுக்கு தயவு கூர்ந்து சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - அலுவலர் திரு. பாலகுரு அவர்களை அலைபேசி எண். 9944635357, மின்னஞ்சல் முகவரி : balagurub@chola.murugappa.com / திரு. மொஹம்மத் அப்துல் க்வாவி - அலைபேசி எண். 7305990872 மூலம் தொடர்பு கொள்ளலாம். சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் அசையா சொத்துக்கள் / ஜாமீன் சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

தேதி : 29.03.2024
இடம் : கோயமுத்தூர், தமிழ்நாடு

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர், சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - க்காக

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்

பெருநிறுவன அலுவலகம் : சோழா க்ரஸ்ட், C54 & 55, சூப்பர் B-4, திரு வி க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032 த.நா.

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (விற்பனை - மின்னணு விலைகோரல் மூலம் மட்டும்)

பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8 மற்றும் 9 ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் **பொதுமக்களுக்கும்** குறிப்பாக **களம் (A)** ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த **சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் களம் (D)** ல் விவரிக்கப்பட்டவாறு **ஆக்கபூர்வ / இயற்கவாதீனம்** எடுக்கப்பட்டுள்ள **களம் (C)** ல் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்"** என்ற அடிப்படையில் இதன் கிழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை செய்யப்படும்.

இதன் மூலம் கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சட்டபூர்வ வாரிசுகள், சட்டபூர்வ பிரதிநிதிகள் **(தெரிந்தோ தெரியாமலோ)** செயலுறுத்துபவர்(கள்), நிர்வாகி(கள்), பின் தொடர்ச்சியாளர்(கள்) மற்றும் பணியமர்த்தப்பட்டவர்(கள்), ஆகியோரில் **களம் (A)** ல் குறிப்பிட்டவாறு எது பொருந்துமோ அது., அந்த நபருக்கு பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) ன் கீழ் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு கூர்ந்து, ஜாமீன் பெற்று கடனளித்த **சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்** - ன் வலைதளம் https://www.cholamandalam.com & https://bankauctions.in ல் உள்ள தொடர்பை பார்வையிடவும்.

வ எண்	[A] கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	[B] வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை (ஜாமீனளித்து பெற்ற கடன்)	[C] அசையா சொத்து / ஜாமீன் சொத்து விபரம்	[D] சுவாதீன வகை	[E & F] அடிப்படை விலை (ரூ.) / டேவணித்தொகை (ரூ.)	[G] ஏல தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்) : HL05CIO000004400 1. முத்துலட்சுமி P, க/பெ. லேட் பரமசிவம் K 2. பரமசிவம் K அவர்களின் தெரியாத வாரிசுகள், இருவரின் முகவரி : L-210, ஹவுசிங் யுனிட் ஃபேஸ் 2, கோயமுத்தூர் வடக்கு - 641029, தமிழ்நாடு	28.03.2024ம் தேதியின் படி, ரூ. 57,30,723/- (ரூபாய் ஐம்பத்து ஏழு இலட்சது முப்பதாயிரத்து எழுநூற்று இருபத்து மூன்று மட்டும்)	கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் சார்பதிவகம், குருடம்பாளையம் கிராமம், சர்வே எண். 641, உட்பிரிவு படி சர்வே எண். 641/2 ல் உள்ள 3.93 ஏக்கரில் உள்ள 1.27-1/2 ஏக்கர் & இதில் உருவாக்கப்பட்ட "T.G.K. நகர்" என அறியப்படும் லே அவுட்டில் உள்ள சைட் எண். 76., இதன் **எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன பின்வருமாறு : தெற்கு - சைட் எண். 75, கிழக்கு** - 23 அடி தென்வடல் லே அவுட் சாலை, **மேற்கு** - சர்வே எண். 642., **வடக்கு - சைட் எண். 77**, இவைகளுக்கு மத்தியில் உள்ள அளவீடுகளாவன : **கிழமேல் வடக்கு** - 48.6 அடி., **கிழமேல் தெற்கு** - 48.6 அடி., **தென்வடல் இருபுறமும்** - 40 அடி., என மொத்தம் 1900 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி இடம் மற்றும் அதனுடன் கூடிய இதர வசதிகள் மற்றும் வழி வசதி உரிமைகள் ஆகியன.	ஆக்கபூர்வ சுவாதீனம்	ரூ. 68,18,400/- (ரூபாய் அறுபத்து எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து நானூறு மட்டும்) / ரூ. 6,81,840/- (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து எட்டூற்று நாற்பது மட்டும்)	17.04.2024 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (விலைப்புள்ளி ஆவணத்தின் படி, ஒவ்வொரு முறையும் 5 நிமிடம் என எண்ணிலடங்கா முறை தன்னியல்பான 5 நிமிட நேர நீட்டிப்புடன்)

1. ஆய்வு தேதி & நேரம் : 15.04.2024 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
2. குறைந்தபட்ச விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/-
3. விலைப்புள்ளி / டேவணித்தொகை / பங்கேற்பதற்கான வேண்டுதல் கடிதம் சமர்ப்பித்தல் : 16.04.2024 மாலை 05.00 மணி வரை.

* மற்றும் பணம் செலுத்தப்படும் வரை மற்றும் / அல்லது பணமாக்கப்படும் வரை, கடன் ஒப்பந்த நிபந்தனைகளின் படி மேற்கொண்டு வரும் பொருந்தத்தக்க வட்டி, நிகழ் செலவுகள், செலவுகள், கட்டணங்கள் ஆகியன.

சொத்து ஆய்வு தொடர்பான உதவி அல்லது விலைப்புள்ளி ஆவணம் பெற மற்றும் இதர விசாரணைகளுக்கு தயவு கூர்ந்து **சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்** - அலுவலர் திரு. பாலகுரு அவர்களை **அலைபேசி எண். 9944635357**, மின்னஞ்சல் முகவரி : balagurub@chola.murugappa.com / திரு. மொஹம்மத் அப்துல் க்வாவி - அலைபேசி எண். 7305990872 மூலம் தொடர்பு கொள்ளலாம். **சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரின்** சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் அசையா சொத்துக்கள் / ஜாமீன் சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

தேதி : 29.03.2024
இடம் : கோயமுத்தூர், தமிழ்நாடு

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - க்காக